Format

Application Form for the post of ________________________________________

Pass-Port Size Photograph of the applicant to be affixed

| | | | |
|---|---|---|---|
| 1 | Name of the Applicant | : | |
| 2 | Name of the Father / Husband | : | |
| 3 | Date of Birth | : | |
| 4 | Age as on 01.01.2025 | | |
| 5 | Native District | : | |
| 6 | Marital Status | : | |
| 7 | Address for Communication | : | |
| 8 | Phone Number<br>(Land Line and Mobile) | : | |
| 9 | E-Mail ID | : | |
| 10 | Educational Qualification | : | |
| 11 | Additional Qualification | : | |
| 12 | Community / Religion<br>(For Statistical Purpose only) | : | OC / BC / MBC / SC / ST |
| 13 | Details of Working Experience | : | |

| | | | |
|---|---|---|---|
| 14 | Any Political Activities | : | |
| 15 | Any Criminal Cases Registered | : | |
| 16 | If Retd. Govt. Servant, Please mention the details about Dept. Disciplinary Proceeding Pending | : | |
| 17 | If physically disabled mention the disability | : | |
| 18 | In case of widow / divorcee / deserted wife / destitute / ex-student of home (Please mention the category) | : | |
| 19 | Are you involved in any NGO / Adoption Agency | : | |
| 20 | Any of the Family members involved in any NGO / Adoption agency | : | |
| 21 | **Enclosures (Self attested)**<br>Educational qualification.<br>Working Experience<br>If Retired Govt. Servant, Please attach the Retirement Certificate. | : | |

Above given particulars are correct to my knowledge.

Signature of the Applicant

Date :
Place :

பத்திரிக்கை செய்தி

மிஷன் வத்சல்யா திட்டத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர் தேர்விற்கான விண்ணப்பங்கள் வரவேற்பு - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார், இ.ஆ.ப அவர்கள் தகவல்

மிஷன் வத்சல்யா திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகில் ஒரு வருட கால ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற கீழ்கண்ட பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**பாதுகாப்பு அலுவலர் (1 பணியிடம்) : தொகுப்பூதியம் - ரூ.27,804/- (ஒரு மாதத்திற்கு)**

- சமூகப்பணி, சமூகவியல், குழந்தைகள் மேம்பாடு, மனித உரிமைகள், பொது மேலாண்மை, உளவியல், மனநலம், சட்டம், பொது சுகாதாரம் மற்றும் சமூகவள மேலாண்மை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் முதுகலை பட்டம் (10+2+3+2 மாதிரி) பெற்றிருக்க வேண்டும்.

  (Post Graduate Degree in Social Work / Sociology / Child Development / Human Rights / Public Administration / Psychology / Psychiatry / Public Health / Community Resource Management from a recognized University)

(அல்லது)

- சமூகப்பணி, சமூகவியல், குழந்தைகள் மேம்பாடு, மனித உரிமைகள், பொது மேலாண்மை, உளவியல், மனநலம், சட்டம், பொது சுகாதாரம் மற்றும் சமூகவள மேலாண்மை ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் இளங்கலை பட்டம் (10+2+3 மாதிரி) பெற்றிருக்க வேண்டும் மற்றும் திட்டம் தயார் செய்தல் / செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றில் 2 ஆண்டுகள் பணி அனுபவம் வேண்டும். சமூக நலன், குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டில் பணி அனுபவம் இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும். மேலும் கணினி இயக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.

  (Graduate Degree in Social Work / Sociology / Child Development / Human Rights / Public Administration / Psychology / Psychiatry / Public Health / Community Resource Management from a recognized University with 2 years experience in Project Formulation / Implementation, Monitoring and Supervision in the Preferably in the field of Women and Child Development / Social Welfare. Proficiency in computers)

- 01.01.2025 அன்றுபடி 42 வயதிற்கு பூர்த்தி அடையாதவர்களாக இருக்க வேண்டும்

**சமூகப்பணியாளர் (4 பணியிடங்கள்) : தொகுப்பூதியம் - ரூ.18,536/- (ஒரு மாதத்திற்கு)**

- சமூகப்பணி, சமூகவியல், சமூக அறிவியல் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் இளங்கலை பட்டம் (10+2+3+2 மாதிரி) பெற்றவர்கள், குழந்தைகள் நலன் சார்ந்த பணி அனுபவம் உள்ளவர்கள், கணினி இயக்குவதில் திறன் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

  (Graduate Preferably in B.A in Social Work / Sociology / Social Sciences recognized University, Weightage for work experience candidate and Proficiency in computers)

- 01.01.2025 அன்றுபடி 42 வயதிற்கு பூர்த்தி அடையாதவர்களாக இருக்க வேண்டும்

முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், சுயசான்றொப்பமிட்ட கல்விச்சான்றுகளின் நகல், பணி அனுபவ சான்றுகளின் நகல் இணைக்கப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்ப படிவங்கள், உரிய சான்றிதழ்களின் நகல் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். மேற்கண்ட பணியிடங்கள் தற்காலிகமாக ஒரு வருட ஒப்பந்த அடிப்படையிலானது.

மேற்கண்ட பதவிகளுக்கான விண்ணப்படிவத்தினை https://tiruchirappalli.nic.in/ என்ற இணையதளத்தில் இருத்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் கீழ்காணும் முகவரிக்கு வந்து சேரும் வகையில் (நேரிலோ/தபால் மூலமாகவோ) அனுப்பப்பட வேண்டும்.

மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலர்,
மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு,
N.E.1, முதல் தளம், மெக்டொனால்டு ரோடு,
கலையரங்கம் வளாகம்,
திருச்சிராப்பள்ளி - 620 001.

மேலும் விபரங்களுக்கு 0431-2413055 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விபரம் பெறலாம் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

PRO to check.

மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தலைவர்,
மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு,
திருச்சிராப்பள்ளி.

2/2